மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதனுடைய முழு விவரம்—தீர்ப்பு கிடைத்த பிறகு, இதற்கு யார் யார் பொறுப்போ அவர்களைப் பற்றிய தகவல்—அரசுக்குக் கிடைக்குமேயானால் நிச்சயமாக யார், எந்த அதிகாரியாக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம்.

*3200. திரு. ஆர். சாமிநாதன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சீர்செய்யப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதிகளைக் கொண்டு கட்டம்கட்டமாக சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாக்கத்தில் ஏற்கெனவே சைக்கிள் ரிக்சா, மாட்டு வண்டி, லாரிகள் போன்றவை சென்று கொண்டிருந்தன. இப்போது தினமும் காலையிலும், மாலையிலும் நகரப் பேருந்துகளும் அந்தப் பகுதியில் திருப்பி விடப்படுகின்றன. எனவே மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ செல்ல போக்கு வரத்து நெரிசல் அங்கே இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்க மதுரை கல்பாலத் திற்கு அருகே, கிழக்கே அமைந்துள்ள ஆல்பர்ட் விக்டர் மேம்பாலத்தை விரிவுபடுத்தியோ அல்லது மதுரை கல்பாலத் திலிருந்து மேற்கே 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காமராஜ் மேம்பாலத்திற்கு இடைப்பட்ட இடத்தில், மதுரை தெற்குப் பாகத்தில் இருந்து வடகரைக்குச் செல்ல தனியாக ஒரு தரைப் பாலத்தையோ அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தப் பாலத்தை சீர்படுத்த வேண்டும் என்பதை அரசு உணர்கிறது. அதைச் சீர்செய்வதற்குச் சுமார் 4 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று அரசு அனுமதி கேட்டு பொறியாளர்கள் எழுதியிருக்கிறார்கள். அதற்கு இடையில் மேடு பள்ளங்களை, குண்டு குழிகளாக இருப்ப வற்றை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அப்பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அடுத்து, மாற்று வழிகளைப் பற்றி உறுப்பினர் சொன்ன கருத்துக்களை இந்த அரசு பின்னர் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் அதிகமாக ஆட்களும், லாரிகளும் ஆக்கிரமிக்கும் நிலை இருக்கிறது. அங்கே, அந்தக் கல்பாலத்தில் லாரிகளை நிறுத்திக்கொண்டு சுத்தம்செய்கிறார்கள். எனவே, விரைவில் அரசு அங்குள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நல்ல முடிவை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏரி, குளம், குட்டைகளை ஆக்கிரமிப்பு செய்வதைப்பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது பாலத்தையும் ஆக்கிரமிக்கிறார்கள் என்ற செய்தியை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுதல்.

*3256. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி ;
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரை களைச் சீர்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து எடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஒரே மாத்திரையில் பல வைட்டமின்களை உள்ளடக்குவது போல பல கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள்.